# கானல் கனவு

ராம், சிங்கப்பூரில் வேலை அனுமதிச்சீட்டில் ஒரு பெரிய கப்பல் கட்டுமான நிறுவனத்தில் வேலை பார்க்கிறான். நிறைய கனவுகளுடனும் கடன்களுடனும் ஆறு மாதங்களுக்கு முன்பு சிங்கப்பூருக்கு வழியனுப்பி வைத்தனர். வேலை ஓரளவுக்கு பழகிவிட்டதென்றாலும் வீட்டு ஞாபகம் அவனை வாட்டி எடுத்தது. அதிலும் சிந்துதான் மனதைப் போட்டுப்படுத்தி வைத்தாள். சிந்து அவனுடைய மாமன் மகள், கல்லூரியில் இளங்கலை தமிழ் படித்துக்கொண்டிருக்கிறாள்.

தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவளும் கூடவே வருவதுபோல் மனசுக்குள் சிலாகித்தான். எந்தப்பொருள் வாங்கினாலும் அவளிடம் சொல்ல வேண்டுமென்றுத் தோன்றும். சிலநேரங்களில் காய்ந்துக் கிடக்கும் எள்ளுச்செடி வெடித்துப் புலம்புவதைப்போன்று அவளிடம் பேசுவதாக நினைத்துத் தானே பேசிக்கொள்வான், பக்கத்திலிருப்பவர்கள் தம்மைப் பார்த்துவிட்டார்களோ என்றெண்ணி உதட்டைக் கடித்து உணர்வுகளை விழுங்குவான்.

சிங்கப்பூர் வந்திறங்கியவுடன் இரண்டு சாலைகளிலும் பணமரம் காய்ப்பது போலும் உடனே கொத்துக்கொத்தாக பறித்தனுப்ப வேண்டுமென்றுதான் எல்லோரும் நினைக்கிறார்கள். இங்கு வந்து படாத பாடுபடுவது யாருக்குப் புரிகிறது. வீட்டுக்கடன், இரு தங்கைகளின் திருமணம் என்ற கடமைகளோடு வந்தாலும், முடிந்த வரை சிக்கனமாக தன் தேவைகளைக் குறைத்துக்கொண்டு பணத்தைச் சேர்த்து வைத்து மாதமாதம் வீட்டிற்கு அனுப்பிவிடுவான். ஆனால் போன் கார்டு மட்டும் வாராந்தவறாமல் வாங்கி சிந்துவிடம் பேசுவான்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் திருவிழா போலிருக்கும். அன்று மட்டுமே உணர்வுப் புற்களுக்கு விடிவதற்குள் வியர்க்க ஆரம்பித்துவிடும். சுறுசுறுப்பாக அதிகாலையில் எழுந்து சிந்துவிடம் ஒரு வாரத்தில் நடந்ததையெல்லாம் மணிக்கணக்கில் பேசியபின்தான் ஞானப்பால் குடித்ததைப் போன்ற தெம்பில் அன்று மட்டுமே உயிர் வாழ்வது போல் தோன்றும். வழக்கம்போல் இன்றும் கம்பெனியின் வாசலிலுள்ள மரத்தடியின் கீழேயுள்ள சிமெண்ட் கட்டையில் உட்கார்ந்து போன் கார்டின் எண்களை

அழுத்திவிட்டு பேச உட்கார்ந்தான்.

எதிர்முனையில் அவள் எடுக்கவில்லை, கவலையில் மணிபார்த்தான் 8.00. இந்நேரம்இந்தியாவில் 5.30 மணி எழுந்திரித்திருக்க மாட்டார்கள் என்றெண்ணி ரூமிற்குச் சென்றான். சிந்து கொடுத்தனுப்பிய புல்லாங்குழலை காலண்டரில் ஒட்டி வைத்திருந்த அவள் போட்டோவிற்கு மேல் செருகி வைத்திருந்தான், அதையெடுத்து வாசிக்கத்தொடங்கினான்.

புல்லாங்குழல் வாசிக்கத்தொடங்கினால் போதும் பக்கத்தில் அவள் அமர்ந்திருப்பதாக நினைத்துத் தனக்குப் பிடித்த பாடல்கள் ஒவ்வொன்றாக நேரம்போவது கூடத் தெரியாமல் வாசிப்பான். பக்கத்தூரு தோப்பில் மூங்கில் ஒடித்து, இருவரும் சேர்ந்து செய்த புல்லாங்குழல். 'என் மூச்சுக்காற்றை ஒட்டிவைத்திருக்கிறேன் மாமா, இதிலிருந்து வருவது இசையல்ல என் மூச்சு' என்று சொல்வாள். இருவரும் மாறி மாறி புளிய மரத்தடியில் உட்கார்ந்து வாசிப்பதுண்டு.

மீண்டும் தொலைபேசியில் அவளிடம் பேச முயற்சி செய்தான். போன் அடித்தவுடனே சிந்து ஓடிவந்து எடுத்தாள். இறந்துபோனவன் உயிர்த்தெழுந்ததைப் போல் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'என்ன தூங்கு மூஞ்சிக் கழுத, இப்பத்தான் எழுந்தியா...?' என்றான்.

'இல்ல மாமா, நீ காலையிலயே போன் பண்ணுவன்னு விடியறதுக்குள்ளே எழுந்திரிச்சி சாணி கரைச்சிப் போட்டுட்டு ஆத்துக்குப் போய் துணி துவைச்சிக் குளிச்சிட்டு அந்த கல்லு பாறையில கொஞ்சநேரம் உட்கார்ந்துட்டு வரேன்'

'ஏன் அங்க போய் உட்கார்ந்திருந்த ? ' , என்றான்.

'உனக்கு ஞாபகமிருக்கா? முன்னாடில்லாம் நாம செட்டு சேர்ந்து குளிக்கப்போவோம், அந்தக் கல்லுப் பாறையிலிருந்து ஆத்துல குதிச்சி நீச்சலடிச்சி முங்கி விளையாடுவோமே! இப்பல்லாம் ஆத்துக்கு துணித் துவைக்கவும் குளிக்கவும் மட்டுமே போறேன். ஆனால் அந்தக்கல்லுப்பாறையில கொஞ்ச நேரம் நாம விளையாண்டத நினைச்சிட்டே உட்கார்ந்திருந்தா சந்தோசமாக இருக்கும் . நீ என் கூட இருக்கறமாதிரியிருக்கும். நீ இல்லாதது எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு மாமா', என அழத்தொடங்கினாள்.

'அடச்சீ கழுதை... உனக்கென்ன... உன் மாமன் சிங்கப்பூரில உனக்காகவே வாழறேன். கைநிறைய சம்பாரிச்சி கொண்டுவந்து கொட்டுவேன், நமக்காக குருவிக்கூடு மாதிரி நம்ம தென்னந்தோப்பு நடுவில வெள்ளை மாளிகைக் கட்டி பக்கத்தில் போர் தண்ணி ஓட சில்லுன்னு காற்று ஒரு பக்கம் வீச, எல்லா வகை ரோஜா, மல்லிகைப் பூவெல்லாம் பதியம்போட்டு தினமும் நானே நிறைய பூப் பறிச்சி உனக்கு வச்சிவிடுவேன்'.

'போதும் மாமா... அதெல்லாம் வேணாம். நீ முதல்ல நல்லா சம்பாரிச்சி, சீக்கிரமா உன் தங்கச்சிங்க கல்யாணத்த முடி, அப்புறம் இங்க வந்துடு. நாம வயக்காட்ட பார்த்துக்கிட்டு சந்தோசமா இருக்கலாம். அது போதும் மாமா.. வேறெந்த ஆசையும் எனக்கில்லை. என் கனவு, என் உலகம் எல்லாமே நீதான்' யதார்த்தமாகப் பேசினாள்.

அவன் உருகி நின்றான், இப்பவே அவளைப்பார்த்து கட்டியணைத்துக்கொள்ளவேண்டும் போல் இருந்தது. கை கால்களைக் கட்டி சிங்கப்பூரில் தள்ளிவிட்டார்கள். எல்லாமே வெறுப்பாக இருந்தது. ஈரவிறகு எரியாமல் பொங்குவதைப்போல் வழிந்து வந்த கண்ணீரை அவளுக்குத் தெரியாமல் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு, 'சரி அப்படியே வந்திடறேன் சந்தோசமா' என்றான்.

இப்படியொருத்தி கிடைக்கக் கொடுத்து வைத்திருக்கவேண்டும். மாமன் மகள் தான் என்றாலும் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள். என் கூடப் பொறந்ததுங்களே 30 பவுனுக்கு குறையாம போட்டால் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு ஒத்தைக் காலில் நிக்குதுங்க. நான் எப்ப சம்பாரிச்சி எப்ப கல்யாணம் பண்ணி... பெருமூச்சுவிட்டான்,

'சிங்கைப் பட்டணம், எல்லாம் கட்டணம்

கையை நீட்டினா காசுமழை கொட்டணும் என்ற திரைப்பாடலைப் பாடிக் கொண்டே

'கையில் திருவோடுகளோடு திரியும் எச்சைப்பாத்திரங்கள் நாங்கள்,
குறைக் குடத்தின் புலம்பலாய் எங்களின் குரல்கள்
ஆடியாடி மௌனமாய் அடங்குகிறது ' என்று சொல்ல

சிந்து அழுதுவிட்டாள், ' புரியுது மாமா நீ பேசறதக்கேட்க ரொம்ப சங்கடமாயிருக்கு' என்றாள்.

'சரி அதைவிடு, வேறெதாவதுப் பேசுவோம்' என்றான்,

'சாப்பாட்டுக்கு என்ன செய்றே, நீயாவே சமைச்சிப்பியா?' என்றாள்.

'ஆமாம். இங்க கேஸ் அடுப்பு இருக்கு அவங்கவங்க தனித்தனியா சமையல் சாமான் வாங்கி வந்து நாங்களே சமைச்சிப்போம்' என்றான்.

'தங்குறதெல்லாம் வசதியாயிருக்கா? ', என்றாள்.

'இங்க கப்பல்ல சாமான்களெல்லாம் ஏத்துவாங்கள்ள பெரிய பெரிய கண்டெய்னர் அதைக்கொண்டு வந்து கம்பெனில போட்ருக்காங்க. அதுல தான் தங்கியிருக்கோம், வீடு மாதிரியே 4 பேர் ஒரு கண்டெய்னர்ல படுத்திருப்போம். பேன் மெத்தையெல்லாம் தனித்தனியா கொடுத்திருக்காங்க குளிக்கறதுக்கு பின்னாடி பாத்ரூம் இருக்கு. அப்புறம் என்ன?', என்றான்.

'ஏன் மாமா... உங்களுக்கு வீடு இல்லையா? '

;இல்லம்மா.. வீடு கொடுத்தா வாடகையெல்லாம் அதிகமாகும்னு இங்க தான் தங்க வச்சிருக்காங்க. வேற வழியில்லை முதலாளி சொல்றதைக் கேட்டுத்தான ஆகணும் ' என்றான்

அவளுக்கு அழுகையாக வந்தது. 'இப்படி நீ அனாதையா கண்டெய்னர்ல படுத்து தூங்கி கஷ்டப்படற. இங்க யாரும் அதப்பத்தி கவலைப்படற மாதிரி தெரியல மாமா. நீ சிங்கப்பூரில இருக்கன்னு பெருமைதான் பட்டுக்கிட்டு அலையிதுங்க'.

'ச்சீ அப்படில்லாம் சொல்லாத... நான் சந்தோசமா தான் இருக்கேன். அப்படியே கஷ்டப்பட்டாலும் உங்களுக்காகத்தானே கஷ்டப்படறேன். நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காம பத்திரமா இரு.'

'நீ என்ன மாதிரி வேலை செய்ற அங்க ? ' என்றாள். இங்க பெரியப் பெரிய கப்பல்லாம்

வரும், ஏதாவது ரிப்பேராயிட்டா கொண்டு வந்து போட்டுடுவாங்க, நாங்க சரி செய்து கொடுப்போம். சில நேரம் கப்பல் உள்ள கரியள்ளுற வேலை கூட இருக்கும் உள்ளேயிறங்கி பைப்பெல்லாம் சுத்தப்படுத்தச் சொல்வாங்க. என்ன வேலை சொன்னாலும் செய்யணும் இதைத்தான் செய்வேன் அதை செய்யமாட்டேன்னு சொன்னா சூப்பர்வைசர் வேலையை விட்டுத் தூக்கிடுவாரு.

'அப்படியா?'

'ஆமாம், ஆனால் சில நேரம் இந்த பயலுங்களும் விட்டு வைக்கமாட்டாங்க ஆபிசரையெல்லாம் இல்லாத கிண்டல் பண்ணுவானுங்க. எங்க சூப்பர்வைசர மாமான்னுதான் கூப்பிடுவானுங்க, ஏதாவது வேலைய முடிக்கலன்னு கத்திட்டு அங்கிட்டு போனாருன்னா உடனே சிரிச்சிக்கிட்டே கிண்டல் பண்ணுவானுங்க. எப்படிங்கறே... நீ நாசமா போக.. உன் தலையில கொள்ளிக்கட்டைய வைக்க... உன் கேர்ள் பிரண்டு உன்னை விட்டுட்டு ஓடிப்போவ... அப்படின்னு கோவத்தை முகத்தில காட்டினா கண்டுபிடிச்சிடுவாருன்னு சிரிச்சிக்கிட்டே திட்ட, அவனோ சீனாக்காரன் மொழி புரியாம சிரிச்சிக்கிட்ட 'யா யா...' ன்னுட்டே போய்டுவான், நல்லா கலாய்ச்சிக்கிட்டேயிருப்பானுங்க'.

சரி ரொம்ப நேரமாயிட்டு.. நான் சமைக்கப்போறேன். சாயந்தரமா கால் பண்றேன்', என்று சொல்லி பேச்சைத் துண்டித்துவிட்டு சமைக்கக் கிளம்பினான்.

அவளுடன் பேசியதையே நினைத்துக்கொண்டு ஒரு வழியாக சமைத்து, ஒரு குட்டித்தூக்கம் போட்டுவிட்டு எழுந்தான். அவனுடைய நண்பன் ராஜனிடமிருந்து போன் வந்தது,

'ஏய் தேக்கா வரியாடா' , என்றான்.

'இல்லடா... வசந்தத்தில நல்ல படம் இருக்கு நான் வரல', என்றான்.

'இல்லடா கொஞ்சம் உன்கிட்ட பேசவேண்டும், அதோட போனமாசம் நம்ம பக்கத்தூரு

குமாரு தங்கச்சிக்கு கல்யாணம் ஆனதில்ல அவன் ஓட்டல்ல விருந்து வைக்கிறேன்னு சொல்லியிருக்கான். இப்ப தான் கல்யாண சிடி வந்ததாம். நம்ம பிரண்டெல்லாம் கூட்டிட்டு வான்னு சொன்னான். வாடா.. அப்படியே போய்ட்டு எல்லாரையும் பார்த்துட்டு வருவோம்', என்றான்.

'சரி சரி வரேன்...திரும்பி வரும் போது காய்கறியாவது வாங்கிட்டு வரலாம். நீ முஸ்தபாக்கு எதிரில் காத்துக்கிட்டு இரு, நான் கிளம்பி வரேன்', என்று கிளம்பினான்.

ராஜனும் அதே கம்பெனியில் தான் வேலை செய்கிறான், ஆனால் அவனுக்கு ஒர்க்கர்ஸ்ஆஸ்டலைச் சுத்தம் செய்யும் வேலை கொடுத்து அங்கேயே தங்க வைத்திருக்கிறார்கள். இரண்டு பேரும் ஒரே ஊர்க்காரர்கள் எப்பொழுதாவது தான் பார்த்துக்கொள்ள முடியும்.

தேக்கா சென்றதும் ராஜன் சோகமாக நின்று கொண்டிருந்தான். 'என்னடா ஒரு மாதிரியிருக்க?' என்றான்.

'இல்லடா மனசே சரியில்லை. உனக்குத்தான் தெரியுமே ஆஸ்டல சுத்தம்பண்ற வேலை பார்க்கிறேன்னு சரியா சாப்பிட முடியலடா, இந்தப்பயலுங்க கொட்டுற சாப்பாடு, குப்பை எல்லாத்தையும் இந்தக் கையாலதான்டா சுத்தம் பண்றேன் குமட்டிக்கிட்டு வருது. குடிச்சிட்டு வாந்தி எடுத்து அப்படியே போட்டுட்டு போயிடறானுங்க, எச்சிய எங்கப்பார்த்தாலும் துப்பிவைக்கிறானுங்க, எல்லாத்தையும் சகிக்கமுடியல. நல்லா சாப்பிட்டு எத்தனை மாசமாகுது தெரியுமா? வாய்கிட்ட கையைக் கொண்டுபோனாலே குமட்டுதுடா, என்னால நிம்மதியா தூங்க முடியல செத்துடலாமான்னுகூடத் தோணுது. பணம் சம்பாரிக்கறதுக்காக எவ்ளோதான் கஷ்டப்படறது ஒரு மனுசன்... ' சொல்லிவிட்டு தேம்பியழத் தொடங்கினான்.

இவனோ மெதுவாக அவனைத்தட்டிக்கொடுத்துப் பேசினான். நீ அழுவதால் இப்போதைக்கு எதுவும் ஆகப்போவதில்லை. நான் முதலாளிகிட்டப் பேசி உனக்கு வேற வேலை மாத்தி கொடுக்கமுடியுமான்னு கேட்டுச்சொல்றேன். நீ கவலைப்படாம இரு, வேலைக்காக கானல் நீரில் மீன் பிடிப்பவர்கள்னு சொல்வாங்க ஆனால் புழு

போன்ற பணத்தைக் கண்டவுடன் கண்ணீரிலும் ரத்தத்திலும் மீன் பிடிக்கும் மடையர்கள், என்ன செய்வது சமாளிக்கத்தான் வேண்டியிருக்கிறதென்று சமாதானப்படுத்திவிட்டு ஓட்டலுக்குச் சென்றார்கள்.

அங்கு சாப்பாட்டு மேசை இவன் நண்பர் வட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது, கடைக்காரரிடம் கல்யாண சிடியைப்போடச்சொல்லி தன் குடும்பத்தை அறிமுகப்படுத்திக்கொண்டே வந்தவர்களைச் சாப்பிடச் சொல்லிக்கொண்டிருந்தான் குமார்.

'எவ்வளவுடா மொய் வைக்கிற? 20 வெள்ளி வைப்போம்டா இவனும் கஷ்டப்படறான் இங்க எப்படியிருந்தாலும் திருப்பி எடுக்கற காசு தானே' என்று பேசிக்கொண்டு சாப்பிடத்தொடங்க பக்கத்திலிருந்த ராஜனுக்கு சாப்பிடமுடியாமல் குமட்டுவதைக்கண்டு இவனே பிசைந்து, ஸ்பூன் கொண்டு வரச்சொல்லி எடுத்து வைத்து சாப்பிடச்சொன்னான். ராஜனுக்கு கண்கள் தளும்பியது.

சாப்பிட்டுக் கிளம்பினார்கள். இடையில் இன்னொருவன் பேச்சுக்கொடுத்தான் 'அண்ணே எந்த ஊருன்னே எங்கேயிருக்கிங்க நான் 5000 வெள்ளி சீட்டு சேர்த்துக்கொண்டிருக்கிறேன் நீங்களும் வேணும்னா சேருங்களேன். நம்மள மாதிரி இருக்கறவங்க மொத்தமாக காசு பார்க்க முடியாதுண்ணே. இப்படி ஏதாவது செய்தால் தான் நாமளும் இப்படி தங்கச்சி கல்யாணத்தை நடத்தமுடியும்' என்றான். இவனுக்கும் சரியெனப்பட்டது, ' சேர்ந்துக்கறேன்', என்று சொல்லிவிட்டு நடந்தான்.

கூட்டம்கூட்டமாக பசங்களெல்லாம் கண்டயிடத்தில் உட்கார்ந்து தண்ணியடித்துக் கொண்டிருப்பதைப்பார்த்து, 'ஏண்டா நம்ம பசங்க இப்படி நடந்துக்கறாங்கன்னே புரியல' 'அதுக்கென்னடா... சுதந்திரமா அவங்கவங்க விருப்பம்போல உட்கார்ந்திருக்காங்க இதுல என்னயிருக்கு?' என்றான் ராஜன். 'தப்புடா ஊரோடு ஒத்துவாழ்ன்னு சொல்வாங்க நம்மைப்பார்த்து மத்தவங்க அருவெறுப்பான பார்வையை வீசறதப் பார்த்து சகிக்கமுடியலடா. மத்தயினத்தப்பாரு யார் பணக்காரன் ஏழைன்னு கண்டுபிடிக்கமுடியாது அவனவனுக்குன்னு ஒரு டிகினிட்டியை மெய்ன்ட்டெயின் பண்றாங்க நமக்கு ஏன் புரியமாட்டேங்குதுன்னு புரியல... கேட்டா

உனக்கென்னம்பானுங்க... சரி வா நம்ம வேலையைப் பார்ப்போமென்று கிளம்பினார்கள்.

மறுநாளே முதலாளியிடம் ராஜனின் நிலைமையை எடுத்துச்சொன்னான், அடுத்த மாதம் மியான்மர்லர்ந்து ஒரு செட் வராங்க அவங்கள்ல யாரையாவது அங்க போட்டுட்டு இவனை சிப்யார்ட்ல போடலாமென்றார். சரியென்று மகிழ்ச்சியுடன் ராஜனிடம் சொல்லிவிட்டு வேலையை கவனிக்கத்தொடங்கினான்.

சிந்து சாயந்தரம் போன் செய்தாள். 'என்ன மாமா பண்றிங்க. நான் காலேஜிக்கு போயிட்டு இப்பத்தான் வரேன் எஸ்டிடி பூத் பார்த்தேன் உங்க குரலைக் கேட்கணும்போல இருந்தது அதான் போன் செய்தேன்' என்று சொல்லி 'அப்புறமா பேசுங்க', என்று வைத்துவிட்டாள். இவனுக்கு மனசு சங்கடமாக இருந்தது. வேலைமுடிந்து இரவு போன் செய்து அவளிடம் சிறிது நேரம் பேசினான்.

'என்ன புள்ள திடீர்னு போன் பண்ணிருக்க' என்றான்.

'இல்ல மாமா, நேத்து சாயங்காலம் பூரா உன் நினைப்பு தான். ஆலமரத்தில நீ கட்டி வச்சிட்டுப்போன ஊஞ்சல் அறுந்து விழுந்துட்டு. எனக்கு மனசு சங்கடமாயிருந்தது. அதான் பேசலான்னு' என்றாள். 'அதுக்கா இப்படி கவலப்படுற. நாம வீடு கட்டும் போது வாசல் போர்டிக்கோ பக்கத்தில பெரிய தேக்குமரப் பலகையில ஊஞ்சல் கட்டித் தர்றேன். அதுல உட்கார்ந்து காலம்பூரா சேர்ந்து ஆடலாம், அதுசரி என்ன செய்துட்டு இருக்கயிப்போ? ', என்றான்,

'அதுவா...காலேஜ்ல தீஸிஸ் பண்ணச்சொன்னாங்க. அதே மாதிரி நீ வரும்போது ஒரு கிப்ட் கொடுக்கறதுக்காக நமக்கு ஒரு தீஸிஸ் பண்றேன். நீயும் நானும் சேர்ந்து நூறு வருடத்திற்கு வாழப்போறோம், இப்போதிலிருந்தே ஒவ்வொரு பத்து வருடத்திற்கும் என்னன்ன செய்யப்போறோம், எப்படி நம்ம வாழ்க்கை முறை மாறப்போவுதுன்னு அழகா எழுதி அதுக்கேத்தாற்போல படம்போட்டு ஒட்டிக்கிட்டிருக்கேன். 90 வயசில நீ கிழவனாகி கூனிக்கிட்டே நடக்கிறே தெரியுமா! ' என்றாள். இவனுக்குப் பொங்கி வந்தச் சிரிப்பை அடக்கிக்கொண்டு என்னதான் காலேஜ் படிக்கிறப் பெண்ணாக இருந்தாலும் சின்னப்பிள்ளையாகவே இருக்கிறாள் இவளைக் கண்ணுக்குள்ளேயே காலம் பூரா வைத்திருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டான்.

நாட்கள் நகர்ந்தன. முதல் சீட்டுப்பணம் கையில் வந்தது. நகை வாங்கி முதல் தங்கை திருமணத்திற்கு அனுப்புவதாகச் சொன்னான். அதற்குள் அப்பா ' வீடு ரொம்ப சின்னதா இருக்கு, கல்யாணம் பண்ணினா நாலு பேர் வந்து உட்காரக் கூட பத்தாது. இந்த வருசத்துக்குள்ள வீட்ட இழுத்துக் கட்டிட்டு அடுத்த வருசம் கல்யாணத்த வச்சிப்போம் நீ என்ன நினைக்கிற' , என்றார். இவனுக்கு அடுத்த பாரம் கூடிக்கொண்டது. 'என்னால முடிஞ்சளவு பணம் அனுப்பறேன் நீங்களே பார்த்து செய்ங்க' , என்று சொல்லிவிட்டான்.

வீட்டையிழுத்துக் கட்டி மொட்டை மாடியாக விட்டுவிட்டு பிற்காலத்தில வேண்டுமென்றால் எழுப்பிக்கொள்ளலாம் என்று வீட்டு வாசலைப் பெரிதாக வைத்து காம்பவுண்டு எழுப்பி வெள்ளையடித்து இவனுக்கு வீட்டின் போட்டோ வந்தது. 'அடுத்தாற்போல வேறெந்த செலவும் வைக்காம தங்கச்சி கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்கப்பா எனக்கு இங்க சிரமமாயிருக்கு', என்றான்.

அடுத்த 3 மாதத்தில் முதல் தங்கைக்கு மாப்பிள்ளைப் பார்த்து திருமணத்தேதி குறித்தார்கள். ஒட்டடையில்லாமல் சிலந்தி வலை பின்ன முடியுமா? நீ வரலன்னா கல்யாணமே பண்ணிக்கமாட்டேன்னு தங்கைச் சொல்ல, இவனுக்கு போகவேண்டுமென்று கொள்ளை ஆசை, போனால் திரும்பி வரவேக் கூடாது என்று எண்ணியிருந்தான். முதலாளியிடம் லீவ் கேட்டுவிட்டு காத்திருந்தான். சிந்துவிடம் பேசும்போது சொன்னாள் 'மாமா நீங்க வரணும்கறதுல உங்களை விட நான்தான் ரொம்பவே காத்திட்டு இருக்கேன். இங்க இவங்கள்ளாம் பேசிக்கறத பார்த்தா உன்னை திருப்பி அனுப்புற மாதிரிதான் இருக்கு. நீ இங்க வந்திட்டா அதுக்கப்புறம் போக நான் அனுமதிக்க மாட்டேன். அதனால நீ நல்லா யோசிச்சிக்கோ வந்தா போக முடியாது. ஆனா ஒண்ணு சொல்லவா, நீ வரவேணாம் அந்தக்காச சேர்த்து வச்சி அடுத்தவ கல்யாணத்தை எவ்ளோ சீக்கிரம் முடியுமோ ஏற்பாடு பண்ணிட்டு நீ வேலையை வேணாம்னு எழுதிக்கொடுத்துட்டு வந்திடு. அப்புறம் போகவே வேணாம். உன் கடமை முடிந்தது அப்புறம் ஒரே மாதத்தில நம்ம கல்யாணந்தான்' என்றாள்.

அவள் சொல்வதும் சரியெனப்பட்டது. கல்யாணத்திற்கு வரமுடியாது எனத் தங்கையை

சமாதானப்படுத்தி அவளுக்கு வேண்டுமென்றதெல்லாம் வாங்கி அனுப்பினான். தங்கையின் திருமணத்தன்று எம்.சி எடுத்துக்கொண்டு ரூமிலேயே கிடந்தான். சிந்து கெட்டிமேளம் கொட்டும்போது போன் செய்தாள், காதில் போனை வைத்தபடியே கெட்டிமேளச் சத்தத்தைக் கேட்டு அழுதுகொண்டேயிருந்தான். அவனைச் சிந்துதான் சமாதானப்படுத்தி 'நீ ஏன் கலங்குற, உனக்கு பதிலா எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன்' என்று தைரியம் சொன்னாள்.

உடனே புல்லாங்குழலை எடுத்துக்கொண்டு வெளியில் சென்றான். நேரம்போவதே தெரியாமல் வாய் வலிக்கும் வரை இசைத்து வலிகளையெல்லாம் மனவெளியைத் தாண்டி காற்றில் பறக்கவிட்டான். மாலையில் போன் செய்து மாப்பிள்ளை மற்ற எல்லாரிடமும் பேசிவிட்டு வைத்தான்.

சில நாட்களுக்கு சோகம் இவனைத் தின்றது. சிந்துவை நினைத்து ஏங்கினான். இவனுக்கு ஒரே பலமும், பலவீனமும் அவளாகவே இருந்தாள். 'அடுத்த தங்கைக்கு வரன்கள் வந்து கொண்டிருக்கிறது எப்போ பண்ணலான்னு நீயே சொல்லு தம்பி', என்றார் அப்பா.

வேலையில்லாமல் சுற்றிக் கொண்டிருந்தபோது என்னை எவ்வளவு திட்டியிருப்பார், கண்டபடி பேசியிருப்பார் இப்போது பணம் சம்பாதிக்கும் மகன் என்றவுடன் 'தம்பி' என்று அழைக்கும் அப்பாவை நினைத்துச் சிரித்துக்கொண்டான். இதுதான் உலகம். 'சரி பாருங்கப்பா, ஆனால் கல்யாணத்தை ஆறு மாசங்கழிச்சி வைங்க. அப்போதான் என்னால பணத்தை கொஞ்சமாவது சேர்த்து வைத்து அனுப்பமுடியும்' என்றான். ஆறுமாதத்தில் அடுத்தச் சீட்டு முடிந்து முழுப்பணமும் கைக்கு வந்துவிடும் இதற்கிடையில் இன்னொரு நண்பரிடமும் சீட்டு கட்ட ஆரம்பித்திருந்தான். அதையும் எடுத்துக்கொள்ளலாமென்ற நம்பிக்கையில் சொன்னான்.

இரண்டாவதுத் தங்கைக்கு வரன் அமைந்துவிட்டது. கல்யாணத்தேதியை முடிவு செய்துவிட்டு சொல்கிறோம் என்றாள் அம்மா. அப்படியே நாட்கள் நகர பணத்தைப் புரட்டி ஊருக்கு அனுப்பி விட்டு நீங்களே திருமணத்தை நடத்துங்க. எனக்கு லீவ் கொடுக்க மாட்டாங்க. என் பர்மிட் இன்னும் 7 மாதத்தில முடிஞ்சிடும் அப்புறம் நானே

வந்திடறேன். அங்க வந்து ஏதாவது தொழில் பண்ணிக்கலாம் என்றான்.

அம்மாவிற்கு என்னவோ போலிருந்தது. இங்க வந்து என்னத்த தொழில் பண்ணப்போற, நீ சம்பாரிச்சதெல்லாம் எல்லாத்துக்கும் கொடுத்திட்ட, உனக்குன்னு ஏதாவது நாலு காசு சம்பாரிச்சிட்டு அப்புறம் இங்க வரலாம்பா. நீ சின்னவ கல்யாணத்துக்கு 1 மாதம் லீவ் போட்டுட்டு வா, அப்புறம் 2 வருடங்கழிச்சி உன் கல்யாணத்த நடத்துவோம். அதுக்குள்ள உனக்குன்னு கொஞ்சம் சம்பாரிச்சிக்கப்பா. எல்லார் மத்தியிலும் நீயும் தலைநிமிர்ந்து நடக்கணும். நாலு காசு உனக்குன்னு இருந்தால் தான் மதிப்பாங்க. அவசரப்பட்டு ஒண்ணும் முடிவு பண்ணாத. நீ லீவ்ல வா. நாம பேசிக்குவோம் என்றாள். ஒருவகையில் சரிதான் என்றாலும் இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தங்கையின் திருமணம் முடியட்டும். சிந்துவிடம் பேசிக்கொள்ளலாம் என்றிருந்தான்.

திருமண நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது. சிந்து சொன்னாள், ' நீ யோசிச்சிக்க மாமா, என்னால எதுவும் கெட்டுப்போச்சுன்னு சொல்லக்கூடாது என் மனசில நீ எனக்கு பக்கத்தில எப்போதும் இருக்கணும் உனக்காக என் மூச்சி இருக்கற வரைக் காத்திட்டு இருப்பேன் ஆனால் என்னைக் கேட்டால் நீ வந்திடுன்னுதான் சொல்வேன்' என்றாள்.

'சரி நான் எங்க முதலாளிகிட்டப் பேசிட்டு சொல்றேன்' என்றான். ஒரே குழப்பமாக இருந்தது. முதலாளி சொன்னார் நீ வந்ததிலிருந்து லீவ் எடுக்கல. பர்மிட் ரினிவ் பண்ணிட்டு ஊருக்குப்போய் 1 மாதம் இருந்திட்டு வா என்றார். எல்லாம் சரி, இவனுக்கு இதே வேலையை தொடர்ந்து செய்ய விருப்பமில்லை. இந்தக் கண்டய்னர் வாழ்க்கைப் பிடிக்கவில்லை. நிம்மதியாக ஊருக்குப் போகலாம் என்று நினைத்தால் ஆளாளுக்குக் குழப்புகிறார்கள் , மொத்தத்தில் தங்கையின் திருமணத்திற்கு போவதில்லை என்று முடிவு செய்தான். பர்மிட் முடிகிறவரைக்கும் வேலை செய்து வருகின்ற காசை எடுத்துக்கொண்டு ஊருக்குப் போயிடுவோம். அப்புறம் 2 வருசம் கழித்து வேண்டுமானால் திரும்பி வந்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்து யாரிடமும் சொல்லாமல் அதற்கான வேலைகளில் இறங்கத்தொடங்கினான்.

திருமணம் நல்லபடியாக முடிந்தது. இவனுக்குப் பெரிதாக வருத்தமெல்லாம் இல்லை.

எல்லோரிடமும் போன் செய்து பேசிவிட்டு வழக்கம்போல் சிடி போட்டு அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டான்.

இனி நான் சம்பாதிப்பது எல்லாம் என்னுடைய சிந்துவுக்குத்தான். இதுவரை அவள் தனக்கென்று எதுவுமே கேட்டதில்லை. தங்கைகளுக்கு வாங்கியனுப்பும்போது கூட இவளுக்கென்று எதுவும் அனுப்பவில்லை அவளும் பெரிதாக எடுத்துக்கொண்டது கிடையாது. அதனால் வெளியில் போகும் போதெல்லாம் அவளுக்கென்று ஏதாவது வாங்கிச் சேமித்தான்.

அப்பாவிடம் பேசினான், 'மாமா வீட்டில போய் பேசி தேதிக் குறிங்க. பர்மிட் முடிந்ததும் நான் வந்து ஒரு மாசத்தில கல்யாணத்த வச்சிக்கலாம்ன்னு சொல்லுங்கப்பா' என்றான். 'அப்படியே ஏற்பாடு செய்யறேன் 'நீ லீவ்லதான வர? ' என்றார். 'ஆமாம் ' , என்று சொல்லி வைத்தான்.

சிந்துவிற்குத் தலைகால் புரியவில்லை, படிப்பும் முடிந்தது இவள்தான் மூத்தவள் என்பதால் எப்போது வேண்டுமானாலும் திருமணத்தை வைத்துக்கொள்ளத் தயாராகயிருந்தார்கள். அப்பாவிடம் சென்று 'ஐந்தாயிரம் பணம் கொடுங்க' என்றாள். அவர் 'ஏன்' என்று கேட்க, 'அப்புறம் சொல்கிறேன்' என்று பணத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடினாள். மாமன் வீட்டிற்குச் சென்று பொருத்தமான இடந்தேடி பால்கனி தான் சரியான இடமென்று முடிவு செய்து ஆசாரியைக் கூட்டி வந்து இடத்தை அளக்கச்சொன்னாள். மரக்கடைக்குச்சென்று தேக்கு மரப்பலகைக்கு ஆர்டர் கொடுத்தாள். யாரும் எதுவும் அவளிடம் கேட்கமுடியவில்லை. நான் வாழப்போற வீடு என் மாமனுக்காக என்ன வேணா செய்வேன் நீங்க யாரும் எதுவும் கேட்காதிங்க, என்றாள்.

'கல்யாணக் கலைய முகத்தில பாருங்கடி இவளுக்கு... மாமன் திரும்பி வரான்னவுடனே என்னமா ஆடறா... கொஞ்சமாவது வெட்கப்பட கத்துக்கடி' என்று பக்கத்தில் தாயம் விளையாடிக்கொண்டிருந்தக் கிழவிகளின் கிண்டலைப் பொருட்படுத்தாமல் பார்த்துப் பார்த்து செய்தாள். ஊஞ்சல் சங்கிலிக்கு ஆர்டர் கொடுத்தாள்.

பத்திரிக்கை அடித்து ராமிற்கு அனுப்பிவைத்தனர், எல்லாரிடமும் கொடுத்தான். ஊருக்குப்போவதற்கு முன் விருந்து வைப்பதாகச் சொன்னான். கம்பெனி செலவிலேயே டிக்கட் போட்டுக் கொடுத்தார்கள்.

முதலாளிக்கு இவனைப்பிடித்துப்போய் விட்டது, ' நீ திரும்ப வேலைக்கு என்னிடமே வந்துவிடு, பசிர்பஞ்சாங் வீட்ல தங்கியிருந்தவர்களெல்லாம் ஊருக்குப்போறாங்க நீ அங்க இருந்துக்கலாம்' என்றார். 'பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டு தேக்காவிற்குச் சென்று அவளுக்காக கைப்பை, கடிகாரம் மேக்அப், நகபாலிஸ் போன்ற எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து வாங்கினான்.

அப்பா தாலிச் செயின் வாங்கி வரச்சொன்னார். கடையிலிருந்தத் தங்கக்கொலுசு மனதை ஈர்த்தது. அவளுக்குக் கற்பனையிலேயே அணிவித்துப்பார்த்தான். அழகாகயிருந்தது எவ்வளவு விலை எனக் கேட்டுக்கொண்டு அடுத்த சம்பளத்தில் எப்படியாவது வாங்கிவிடவேண்டும் என்றெண்ணினான்.

5 ஆண்டுகள் கழித்து ஊருக்குச் செல்கிறான். நாட்கள் இவனுக்கு நகராதக் கப்பலாய் நிற்க தண்ணீரில் தான் மட்டும் தனியே நிற்பதைப் போன்றிருந்தது. வேலை செய்யவே பிடிக்கவில்லை. காய்ந்த மாடு கம்பங்கொள்ளையில் புகுந்தது போல் நினைத்ததையெல்லாம் செய்யவேண்டும். சைக்கிளில் சுற்றவேண்டும். விடியற் காலையில் தெரு முனை டீ கடையில உட்கார்ந்து சூடாக டீ குடிச்சிக்கிட்டே செய்தித்தாள் படிக்க வேண்டும், ஆத்துமீனைப்பிடிச்சி குழம்பு வைத்து சாப்பிட வேண்டும். மட்டன் கொத்துக்கறி எடுத்து கோலா உருண்டை குழம்பு சமைக்கச்சொல்ல வேண்டும்... மண்சட்டியில கருவாட்டுக் குழம்பு வைக்கச் சொல்ல வேண்டும் .... எச்சில் ஊறியது. நினைத்தாலே இனித்தது அவனுடைய பழைய நினைவுகள், அதிலே மூழ்கிப்போய் உட்கார ஆரம்பித்தான். இந்நேரம் ஊர் எப்படியிருக்கும்,தெருக்கள் எல்லாம் மாறிப்போயிருக்கும். நம்மை நிறையபேருக்கு அடையாளந்தெரியாது என்று மலரும் நினைவுகளில் மலர்ந்து நின்றான்.

சிந்து

அங்கு வந்தால் என்ன தருவாய்

இந்தச் சிந்து

காதலை மட்டும் சிந்துவாள் மாமா  என்றாள்

இன்னும் ஒரு வாரந்தானிருக்கிறது உனக்கு என்ன வேணும்னு சொல்லு வாங்கிட்டு வர்றேன்'  என்றான்.

நீ வந்து மல்லிகைப்பூ வாங்கிக்கொடு போதுமென்றாள்.

அதுக்கென்ன இப்பவே வானவில்லில் மல்லிப்பூவை கட்டியனுப்புகிறேன் வாங்கிக்கொள்'  என்றான்.

'சீக்கிரம் என் கூந்தலுக்கு வியர்க்கிறது மணக்கும் மல்லிப்பூவோடு  உன் காந்தக்கண்களையும் சேர்த்தனுப்பு',  என்றாள்.  இருவரும் அன்புமழையில் நனைந்தனர் .

எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டான். சிந்துவுக்கும் மற்ற எல்லோருக்கும் புடவை மற்றும் கோடாலித் தைலம் எல்லாம் வாங்கி வந்தான்.  தைலத்தைப் பார்த்த அந்தச் சீன சூப்பர்வைசர் சொன்னார், இந்த கோடாலித் தைலத்தை ஊத்திக் குடிப்பிங்களா என்ன? ஊருக்கு போறவங்கள்ளாம் ஏன்டா பாக்கெட் பாக்கெட்டா இவ்ளோ வாங்கிட்டுப் போறிங்க என்று கேலி செய்ய, நீ போய் உன் வேலையப்பாரு என்று சொல்லிவிட்டு பெட்டி எடுத்து வாங்கிவந்த பொருட்களையெல்லாம் அடுக்கி வைத்தான். விட்டுப்போனதெல்லாம் பேப்பரில் குறித்துக்கொண்டான்.

ஊருக்குப் போவதற்கு முதல் நாள்  கடைசி நேர ஷாப்பிங் செய்யவேண்டிய பொருட்களை குறித்து வைத்தான். ஆனால் முதலாளி நேற்று வந்த கப்பல் அவசரமாகச் செல்ல வேண்டியிருக்கு, உன் கல்யாணத்துக்குத்தான் ஒரு மாதமிருக்கே, இன்னும் 15 நாள் வேலைசெய்துட்டு போ சம்பளம் கூடத் தர்றேன் என்றுச் சொல்ல, தட்டமுடியாமல் வீட்டிற்குத் தகவல் சொல்லிவிட்டு மீண்டும் வழக்கம்போல் வேலையைத் தொடர்ந்தான். கடைசியில் திருமணத்திற்கு 2 நாள் இருக்கும்போதுதான்  கிளம்ப முடிந்தது. முதலாளியும் சம்பளத்தைக் கணக்குப்பார்த்து 1000 வெள்ளி அதிகம் கொடுத்து உன்

திருமணத்திற்கு பிடித்ததை வாங்கிக்கொள் என்றார். இன்று மாலை வரைக்கும் தான் வேலை, விடியற்காலையில் பிளைட் பிடித்து சென்றுவிடலாம். ஞாயிற்றுக்கிழமை திருமணம். நைட் விடிய விடிய முஸ்தபா சென்டர் திறந்திருக்கும் பார்த்து வைத்தத் தங்கக்கொலுசை வாங்கிவிடவேண்டும், செண்ட், பவுடர், சாக்லெட் எல்லாத்தையும் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று மனசு குதூகலித்தது

சிந்து மிகுந்த ஆவலுடன் கையில் மருதாணியிட்டு பியூட்டி பார்லருக்குச் சென்று முகத்திற்கு ஃபேசியல் செய்துக் கொண்டாள். மாமா வரும்போது கட்டிக்கொள்ள அவனுக்குப்பிடித்த கருஞ்சிவப்புநிறப் பட்டுப்புடவைக்கு ஜாக்கெட் தைத்து எடுத்து வைத்தாள். மல்லிகைப்பூ வாங்கி தானே கோர்த்து பிரிட்ஜில் வைத்தாள். வாசலில் பெரிய கோலம் போட்டு கலரடிப்பதற்காக கோலத்தை வரைந்து பார்த்து அதற்கான கலர் கோல மாவுகளை எடுத்து வைத்தாள், ஆசாரி வந்து 'ஊஞ்சலை மாட்டலாமா' என்றார். தேக்குமர ஊஞ்சலைக் கட்டித் தொங்கவிட்டார்கள். அதில் பழையப் புடவையைப்போட்டு மூடிவைத்து அதற்குமேல் நெருஞ்சி முட்களை போட்டு வைத்தாள். யாரும் அதில் உட்காரக்கூடாது என் மாமாதான் முதன் முதலில் உட்கார்ந்து பொன்னூஞ்சலாடவேண்டுமென்று கட்டளையிட்டுச் சென்றாள்.

வீடு ஒரே பரபரப்பாக இருந்தது. போவோர் வருவோரெல்லாம் தம்பி வந்தாச்சா என்று பேச்சுக்காகவாவது கேட்டுவிட்டுப் போனார்கள். ராமுவிற்குப் பிடித்த பலகாரங்களாக செய்தார்கள். அய்யர் வந்து கல்யாணச் சாப்பாட்டுக்குத் தேவையான மளிகை சாமான்களை எழுதிக் கொண்டிருந்தார்.

இப்போது மணியிரண்டு, 4 மணி எப்போதாகும் என்று வாட்சைப்பார்த்தபடியே நின்றான் ராம். மலேசியக்கார மணி சூப்பர்வைசர் வந்து, 'ராம், சாரி டு டிஸ்டர்ப் யூ அந்தக்குழாய்க்குள்ள ஏதோ லீக் ஆகுதுன்னு குவாலிட்டில கிளியர் பண்ண மாட்டேங்கிறான். நீ கொஞ்சம் இறங்கி என்னன்னு பார்த்துச் சொல்லேன், முடிஞ்சா அத வெல்டிங் போட்டு சரிபண்ணலாமான்னு பார்த்துச் சொல் என்றான். சரி, என்று பைப்புக்குள் இறங்க ஒரே சூடு பொறுக்கமுடியவில்லை. அடியில் கரியின் புகை வர காற்றடைத்துக் கருத்துப்போன பைப்புக்குள் இவனால் மூச்சுவிட முடியவில்லை, முக்கி முனகி உள்ளே சென்று அவன் சொன்னயிடத்தில் உள்ள ஓட்டையைச் சரிசெய்ய முயன்றான்.

இடுப்பிலிருந்த சேப்டி பெல்ட் இறுக்கத்திலிருந்து தளர்வது போலிருந்தது. வெளிக்காற்று வராமல் புகைக்கு நடுவில் மூச்சுவிடமுடியாமல் அடைத்தது. கயிற்றின் இறுக்கமும் தளர்ந்தது. பக்கத்திலிருந்த பைப் கம்பியை எட்டிப்பிடிக்க எம்பினான். மறுமுனைச் சுழன்று அவன் தலையில் இடியாய் இடித்தது. மயங்கினான். மேலேயிருந்த சூப்பர்வைசர் அதிர்ந்துபோய் நல்லா பிடி, மேலே இழுக்கிறேன் என்று கத்திவிட்டு ஆட்களைக் கூப்பிட்டு இவனைப்பிடித்து மேலே இழுத்தார்கள் பேச்சுமூச்சில்லாதது கண்டு ஆம்புலன்ஸ் கூப்பிட்டு அவசர அவசரமாக அவனைக்கிடத்தி ஏற்றிச் சென்றார்கள்.

பக்கத்திலிருந்தவன் ராஜனுக்கும் முதலாளிக்கும் போனடித்துச் சொல்ல ராஜன் உடனே கிளம்பி ஆஸ்பத்திரிக்கு விரைந்தான். காலமும் காலனும் கைகோர்த்தார்கள்.

சிந்து வீட்டில் எல்லோரையும் அதட்டி வேலை வாங்கிக்கொண்டிருந்தாள். 'காலையில மாமா வந்திடும் என்ன டிபன் பண்ணப்போறிங்க' என்று குடைந்துக் கொண்டிருந்தாள். 'இட்லி, வடை, கேசரி தான் செய்யப்போகிறேன்' என்றாள் அத்தை. 'ஆமா எப்போ பார்த்தாலும் இட்லி தானா... மாமாக்கு பூரி பிடிக்கும் பூரிய போடுங்கத்த' என்றாள். 'போடி இவளே... எல்லாருக்கும் பூரி போட்டு தேய்ச்சிட்ருந்தா யார் மத்த வேலையப் பாக்குறது. இங்கதான இருக்கப்போறான் நீ கட்டிக்கிட்டு வந்து ஒவ்வொன்னா ஆக்கிப்போடு' என்றாள்.

'சரி நீங்க செய்ய வேண்டாம். மாமாக்கு மட்டும் பூரி பண்ணி நான் வீட்லயிருந்து எடுத்துட்டு வரேன்' என்று சொல்லிவிட்டு வீட்டிற்குக் கிளம்பினாள்.

மருத்துவமனையில் முதலாளி மற்றும் கூட வேலைசெய்யும் பசங்க இரண்டுபேரும் மட்டும் நின்றுகொண்டிருந்தார்கள். 'என்னண்ணே என்னாச்சி ராமுக்கு' என்று பதறியபடியே வந்தான் ராஜன். இரண்டுபேரும் ஒன்றும் சொல்லாமலே நிற்க முதலாளி தனியாக அழைத்துச்சென்றார்.

'ஹி இஸ் நோ மோர் ', என்றார்.

இவனுக்கு அர்த்தம் புரியாமல் 'என்ன?' என்று திருப்பிக்கேட்டான்.

அங்கு வந்த பசங்க இவனைத் தனியே அழைத்துச்சென்று நடந்ததைச் சொல்லி 'நம்மை விட்டுட்டுப் போயிட்டான்டா' எனக் கதறியழ இவனுக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை, கொஞ்சம் நிதானித்துக் கதறியழத் தொடங்கினான். 'இங்கு அழக்கூடாது' என்றார் முதலாளி. 'திஸ் ஈஸ் அன்எக்ஸ்பெக்டட். அயம் வொரிட், டோன்நோ ஹவ் டு இன்பார்ம் டு ஹிஸ் பேரண்ட்ஸ், ஆல் அவர் ஃபேட்' என்றார். இவனோ செய்வதறியாமல் மூலையில் அப்படியே அமர்ந்தான். 'இப்ப எங்கடா வச்சிருக்காங்க அவன?' 'போஸ்ட்மார்ட்டம் பண்ணித்தான் கொடுப்பாங்கன்னு சொல்றாரு முதலாளி. பாடிய ஊருக்கு அனுப்பனும் கேஸ்கட்டுக்கு போன் பண்ணவான்னு கேட்டாரு. நீ வரட்டும்னு சொன்னேன். நீ கேளு ', என்றான்.

அவரும் பாவம் என்ன செய்வார், விதியை நொந்துகொள்ளும் அவரை எப்படி நாம் நொந்துக்கொள்ள முடியும். நர்ஸ் நிறைய தாட்களில் முதலாளியிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டிருந்தாள். பின் மளமளவென்று ஊருக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டது

'ராஜன் நீ கூடவே போய்ட்டு வா, உனக்கும் டிக்கெட் போடச்சொல்லியிருக்கிறேன்' என்றார் முதலாளி. நர்ஸ் அவன் பாக்கெட்டில் இருந்த பணம் வாட்ச் போன் எல்லாவற்றையும் கொடுக்க, அவற்றை ராஜனிடம் கொடுத்தனர். 'அவன் பெற்றோரிடம் சொல்லு இன்சூரன்ஸ் பணம் வரும், வந்தவுடன் தொடர்பு கொண்டு தேவையானவற்றைச் செய்துத்தருகிறேன், அவங்க வீட்டு போன் நம்பர் எழுதிக் கொடு, எதுனா என்னிடம் பேசச்சொல்' என்றார். போஸ்ட்மார்ட்டம் முடிக்க நள்ளிரவாகும், கேஸ்கட்காரங்களே பேக் பண்ணி நேரடியாக ஏர்ப்போர்ட்டில் கொண்டு வந்துவிடுகிறோம் என்றார்கள். ராஜன் சிந்துவுக்கு போன் செய்தான். அவள் எடுக்கவில்லை. கல்யாண வீட்டில் மைக் செட் அலறியதில் போன் அடிக்கும் சத்தம் யாருக்கும் கேட்கவில்லை. அவனுடைய அப்பாவிற்கு போன் செய்தான் அவரும் எடுக்கவில்லை

தன்னுடைய அண்ணனுக்கு போன் செய்து நடந்ததைச் சொல்லி அழுதான், 'அங்க யாரும் போன் எடுக்கல நீ போய் சேதியைச் சொல்லிட்டு எனக்கு மிஸ்டு கால் கொடு நான் பேசறேன்' என்றான். சரியென்று சொல்லிவிட்டு போன அவன் அண்ணன் சிறிது நேரத்தில் போன் செய்தான், 'இங்கு கல்யாண வீடு அலங்கரிச்சி எல்லாரும் சந்தோசமா பலகாரம் சுட்டுக்கிட்டு இருக்காங்க. இப்பப்போய் நான் சொல்லலடா.. மனசு சங்கடமாயிருக்கு. நீ புறப்பட்டு வா நான் மட்டும் ஏர்ப்போர்ட் போய் கூட்டிட்டு வரேன்னு வீட்ல சொல்லிட்டு நம்ம பசங்களக் கூட்டிட்டு வரேன். இங்கு வந்தவுடன் அவங்களுக்கு தெரியட்டும்டா அந்தப்பொண்ணால இதைத் தாங்கிக்க முடியாதுடா... செத்துடுவாடா.. எனக்குச் சொல்ல தைரியமில்லை' என்று கலங்கினான். இவனுக்கு சரியாகப் படவில்லை இருந்தாலும் தனக்கிருந்த அவசரத்தில் சரியென்று சொல்லிவிட்டு தன்னுடைய ரூமிற்குச் சென்று எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு கிளம்பினான். தன்னுடைய நண்பனுக்கு போன் செய்து ராமுவின் உடைமைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு ஏர்ப்போர்ட் வரும்படிக் கூறினான்.

ஏர்போர்ட்டில் நண்பர்களின் கூட்டம் கரை புரண்டது. எல்லோர் முகத்திலும் கவலை ரேகை கலங்கியோடியது. ஒருசிலர் ராஜனைக் கட்டிக்கொண்டு அழுதார்கள். கேஸ்க்கட்டிலிருந்து வேன் வந்தது. பின்னாடியே முதலாளியும் சூப்பர்வைசரும் வந்தார்கள் எல்லோரிடமும் அழுதுக்கொண்டே விடைபெற்றான். முதலாளி அவன் கையில் 2000 வெள்ளி பணத்தைக் கொடுத்து அவன் வீட்டில் கொடுக்கும்படிச் சொல்லி இவனுக்கு தனியாக 500 வெள்ளி கொடுத்தார். 'இது தாங்கமுடியாத இழப்பு தான் என்னுடைய அனுதாபங்களைச் சொல்' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

விமானம் கிளம்பியது, ஊருக்குப் போன் செய்து செய்தியைச் சொல்லியாச்சான்னுத் தெரியவில்லையே என்றார் முதலாளி. நீங்க ஒரு முறை பேசுங்க அதுதான் நல்லது என்றார் சூப்பர் வைசர். உடனே அவனுடைய வீட்டுக்கு போன் செய்ய தூக்கக்கலக்கத்தில் அவனுடைய அப்பா எடுத்து 'ஹலோ சொல்லுங்க, யாரது?' என்றார். இவனுக்குத் தமிழ் புரியாமல் ஆங்கிலத்தில் பேச என்ன... என்ன... என்று மாறிமாறி கேட்டுக்கொண்டு யாரோ இங்கிலிசுல பேசுறாங்க ஒன்றும் புரியவில்லையென்று போனை வைத்து விட்டார் ராமின் தந்தை.

சொன்னபடியே ராஜனின் அண்ணன் மட்டும் தன்னுடைய நண்பர்களைக் கூட்டிக்கொண்டு ஏர்ப்போர்ட் வந்திருந்தான். காரில் ஏற்றி வீட்டிற்குச் சென்றார்கள். தெரு முனையில் கார் திரும்பியதுமே ஆங்காங்கே நின்றுக்கொண்டிருந்த பசங்கஎல்லோரும் காரின் பின்னாடியே ஓடி வர 'தம்பி வந்துட்டான்டா' ன்னு கத்திக்கொண்டே அனைவரும் வாசலுக்கு வர,

கொள்ளைப்பக்கம் நின்றுக்கொண்டிருந்த சிந்து அவசர அவசரமாக ஆரத்தியைக் கரைத்துக்கொண்டு ஓடி வந்தாள் வழியிலிருந்த ஊஞ்சலின் மீது போட்டிருந்த முட்களை எடுத்து வேலியோரம் எரிந்துவிட்டு புடவை முந்தானையால் ஊஞ்சல் பலகையைத் துடைத்துவிட்டு வாசலுக்கு ஓடி வந்தாள்.

ராஜன் முதலில் இறங்கினான், பைகளை எடுத்துப் பொத்தென்று எறிந்தான். அதிலிருந்த புல்லாங்குழல் விழுந்துத் தெறித்தோடியது. அதைக்கவனித்த சிந்து கலக்கத்துடன் பார்த்தாள். அம்மா கேட்டாள் 'தம்பி எங்கடா... ' காருக்குள் எட்டிப்பார்த்து அப்பா உதட்டைப்பிதுக்கினார். தங்கைச் சொன்னாள் 'தெரு முனையில இறங்கி நமக்கெல்லாம் சர்ப்ரைஸ் கொடுப்பதற்காக நடந்து வரானோ தெரியலயே' என்று எட்டிப்பார்த்தாள் .

ராஜன் தாங்கமுடியாமல் வெயிலில் வெடித்துக்கிடக்கும் விறகுக்கட்டை போல் மனமுடைந்து அழத்தொடங்கினான். எல்லாரும் பயந்துபோக அம்மா கேட்டாள் தம்பி எங்கன்னு சொல்லுடா 'என்னாச்சி எம்புள்ளைக்கு... சொல்லுடா', என்று அவனை இழுக்க ஆரம்பித்தாள். ராஜனின் அண்ணன் காரின் பின்பக்கம் சென்று டிக்கியைத் திறந்து பாடியை தூக்கிக்கொண்டு வரவும் எல்லாருக்கும் இதயத்தில் இடிவிழுந்ததைப் போலிருந்தது. என்னாச்சுன்னு பதறியடித்துக்கொண்டு அழ ஆரம்பிக்க பாடியைக் கொண்டுபோய் எதிரேயிருந்த ஊஞ்சலில் கிடத்தினார்கள். சிந்து மட்டும் அசையாது நின்றபடியேயிருந்தாள். அழுகைக்கிடையில் ராஜன் சொன்னான் கம்பெனியில வேலை செய்யும் போது ஆக்ஸிடெண்ட ஆயிடுச்சி. நேத்து ராத்திரி தான் நடந்தது அவனை முழுவதுமாக பேசவே விடவில்லை. வீடே அலறியது தெருவிலுள்ள எல்லோரும் ஓடி வந்தார்கள், செய்தி ஊர் பூராக பரவ ஆரம்பித்தது.

சிந்து நகர்ந்துச் சென்று விழுந்துக்கிடந்த புல்லாங்குழலை கையில் எடுத்தாள், தன்

முந்தானையால் துடைத்துவிட்டு மூச்சையிழுத்து ஊதிக்கொண்டே ஊஞ்சலை நோக்கி நகர்ந்தாள். அவள் மாமனைப் பார்க்கமுடியவில்லை. அவளுடைய அம்மா அருகிலிழுத்து அணைத்தாள் 'மாமா வருவான் வருவான்னு சொன்னியே வந்துட்டாண்டி பொட்டலங்கட்டி அனுப்பிட்டாங்கடி ஒட்டுமொத்தமா எல்லோரையும் விட்டுட்டு போயிட்டானே... அழுதுரு மனசில இருக்கிற பாரத்தை இறக்கி வச்சி அழுதுடு' என்று கத்தினாள். இவளுக்கு எதுவுமே காதில் விழவில்லை. 'மாமனப்பாருடின்னு அத்தை இழுத்து அவன் மேல் தள்ளினாள், தடுக்கி ஊஞ்சல் கம்பியைப் பிடித்துக்கொண்டே புல்லாங்குழலை ஊதியபடியே அவன் மேல் சாய்ந்தாள். அதன்பின் எழவேயில்லை.

இதயத்துடிப்பில் ஓசையொளிந்துக் கொள்ள புல்லாங்குழலின் மூச்சுக்காற்றில் பிராணனும் கலந்து கொஞ்சம் கொஞ்சமாக காற்றில் கலந்துக் கொண்டிருந்தாள்.

இந்த மூங்கிலின் இசையில் அவளுடைய மூச்சுக்காற்று சங்கமமாகி உயிர் நழுவிக்கொண்டு போனது. யாருடைய கண் பட்டதோ இந்த உயிர்கள் இல்லாமல் போனாலும் உணர்வுகள் உயிராக இருந்தது. இந்தக்காதலின் தூரத்திற்கு வழிகாட்ட காலம் மறுத்துவிட வசந்தத்தையிழந்து மரித்துக்கிடக்கின்றன இந்த இளம்பூக்கள். அக்கறையில் புறப்பட்ட பயணம் காலத் துடுப்பு கண்சிமிட்டியழைக்க இக்கறையின் துறைமுகத்தில் முடிந்தது.

தன்னை எரித்துக்கொண்டு மற்றவர்களுக்கு வெளிச்சத்தைக் காட்டி விட்டு இன்று தன் கூடுகளையிழந்துக் கிடக்கும் இச்சிறுக்குருவிகளின் கனவுகள் கானலாகி மரணத்தைக் குடித்தன. இது காவியக் காதலில்லை, காலன் வரைந்த ஓவியத்தில் காணாமல் போன சாதாரணக் காதல். எப்படியும் வாழ முடியும் என்பதை மீறி இப்படித்தானிருக்க வேண்டுமென காதலின் அர்த்தத்தைச் சொல்லி அளவற்ற அன்போடு பின்னிப் பிணைந்த ஓவியக்காதல் முற்றுப்புள்ளியில் முடிந்தாலும் நினைவுகளைத் திரட்டி நிற்கிறது.

---------------------